## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலை கலாசார பீடம்

### மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக்கலைமாணி தேர்வு 2017/2018
### செப்டம்பர் 2020

### ECS 3113 சர்வதேசப் பொருளாதாரம்

- பகுதி I இல் இரண்டு வினாக்களுக்கும் பகுதி II மூன்று வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.
- கணித்தல் பொறி அனுமதிக்கப்படுகின்றது.
- நேரம்: 3 மணித்தியாலம்

---

## பகுதி I

1. i. உலகமயமாக்கலைத் தூண்டும் காரணிகளை சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. உலகமயமாக்கம் பொருளாதாரங்களுக்கு அவசியமானதா? விளக்குக.

(04 புள்ளிகள்)

iii. நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வது தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஏன் என விளக்குக.

(04 புள்ளிகள்)

iv. சர்வதேச வர்த்தகத்தின் பிரதான நன்மைகள் தீமைகள் எவையென விளக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

2. i. சர்வதேச வர்த்தகம் தொடர்பான வணிக வாதிகளின் கருத்து யாது ?

(04 புள்ளிகள்)

ii. முழுநன்மை, ஒப்பீட்டு நன்மை என்பவற்றை வேறுபடுத்துக.

(04 புள்ளிகள்)

பின்வரும் அட்டவணையில் கானா, தென்கொரியா ஆகிய இரு நாடுகளில் கொக்கோ (C) மற்றும் அரிசி (R) உற்பத்திகளுக்குத் தேவையான ஊழிய அளவுகள் காட்டப்பட்டுள்ளன. இருநாடுகளும் ஒவ்வொரு உற்பத்தியிலும் 50% உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்துகின்றன. அவ்விபரங்களைப் பயன்படுத்தி கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

| நாடு | ஒரு மெற்றிக்தொன் கொக்கா (C) உற்பத்திக்கு தேவையான ஊழியம் | ஒரு மெற்றிக்தொன் அரிசி (R) உற்பத்திக்கு தேவையான ஊழியம் | ஊழிய அளவு |
|---|---|---|---|
| கானா | 10 | 20 | 200 |
| தென் கொரியா | 40 | 10 | 200 |

a. கொக்கா மற்றும் அரிசி உற்பத்திகளில் முழுநன்மையினைக் கொண்டுள்ள நாடு எ

b. இரு நாடுகளிலும் சுயதேவைப் பூர்த்தி நிலையில் கொக்கா மற்றும் அரிசி பொரு
உற்பத்தி நுகர்வு அளவுகள் என்ன?

c. சிறப்புத் தேர்ச்சி சாத்தியமானதா? ஆமெனின் அதன் சமநிலையைக் காட்டுக.

d. இரு நாடுகளுகளுக்குமான பரஸ்பர நன்மை தரக் கூடிய கட்டுப்பாடற்ற வ
ஒன்றினைக் காட்டுக.

e. இரு நாடுகளுக்குமான வர்த்தகம் மூலமான நன்மைகளைக் காட்டுக.

(12 புள்

(மொத்தம் 20 புள்

3. i. காரணிச் செறிவு மற்றும் காரணிப் பேறு என்பவற்றை வேறுபடுத்தி விளக்குக.

(04 புள்

ii. காரணிக் கொடைக் கோட்பாடின் பிரதான எடுகோள்கள் எவை?

(05 புள்

iii. "ஹெக்சர் ஒஹ்லின் மாதிரி" (HO Model) அடிப்படையில் வெவ்வாறு நாடுகளுக்கிடையில
வர்த்தகம் எவ்வாறு சாத்தியமானது ? பொருத்தமான வரைபடத்துடன் விளக்குக.

(08 புள்

iv. "ஹெக்சர் ஒஹ்லின் மாதிரி" நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தினை விளக்க போதுமான
விபரிக்குக.

(03 புள்

(மொத்தம் 20 பு

## பகுதி II

4. i. "வர்த்தகக் கொள்கை" என்பதனால் விளங்கிக் கொள்வது என்ன? நடைமுறை
பயன்பாட்டிலுள்ள பிரதான வர்த்தகக்கொள்கைக் கருவிகள் எவை?

(05 புள்

ii. இறக்குமதி தீர்வை ஒன்றின் பொருளாதார விளைவுகளை பொருத்தமான வரைபடத்தில் வ

(05 புள்

iii. பொருள் X இனை இறக்குமதி செய்யும் நாடொன்றின் அப்பொருளுக்கான உள்நாட்டு கே
நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறுள்ளது

$$P = 38 - Q_d \qquad P = 26 + Q_s$$

a. இந்நாட்டின் வர்த்தகமற்ற சமநிலை விலை, தொகை என்ன?

b. அதன் இறக்குமதி கேள்விக் கோட்டினைக் காண்க.

மேற்குறிப்பிட்ட நாடு குறிப்பிட்ட பொருளுக்காக எதிர்கொள்ளும் வெளிநாட்டு கேள்வி
கோடுகள் பின்வருமாறுள்ளது

$$P^* = 34 - Q^*_d \qquad P^* = 22 + Q^*_s$$

c. வெளிநாட்டின் வர்த்தகமற்ற சமநிலை விலை, தொகை என்ன?

d. வெளிநாட்டு ஏற்றுமதி நிரம்பல் கோட்டினைக் காண்க.

e. இறக்குமதி செய்யும் நாடு அதன் ஒவ்வொரு இறக்குமதி அலகிற்கும் 2ரூபா தீர்
விதிப்பின் புதிய சமநிலை விலை, தொகை என்ன?

(10 பு

(மொத்தம் 20 பு

5. i. பொருளாதார ஒருங்கிணைப்புக்களின் பல்வேறு வடிவங்களை உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. பிராந்திய வர்த்தக ஒப்பந்தங்களின் பொருளாதார நன்மைகள் எவை? அவற்றை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் சவால்கள் குறித்து கருத்துரைக்குக.

(10 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

6. இலங்கையின் சர்வதேச வர்த்தகம் பற்றிய விபரங்களைப் பயன்படுத்தி பின்வரும் தலைப்புக்களின் கீழ் விபரிக்குக.

a. சர்வதேச வர்த்தகத்தின் போக்கு.
b. பிரதான வர்த்தகப் பங்காளிகள்.
c. பிரதான வர்த்தகப்பொருட்கள்.
d. வர்த்தக ஒப்பந்தங்கள்.
e. எதிர்கால வர்த்தகம்.

(20 புள்ளிகள்)

7. பின்வரும் விடையங்களை விளக்கி குறிப்பெழுதுக

a. வழங்கள் வளையி.
b. லியோண்டிப் முரண்பாடு.
c. சுவை வேறுபாடும் சர்வதேச வர்த்தகமும்.
d. தேசிய போட்டி நன்மைக் கோட்பாடு.

(20 புள்ளிகள்)